# LEADER

**எல்லைகளைத் தாண்டி...**

இதழ் 18 மார்கழி 2017




முகாமைத்துவ துறை
வர்த்தக முகாமைத்துவ பீடம்
கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை.
2017

கிழக்குப்பல்கலைக்கழக முகாமைத்துவ துறையின் சஞ்சிகை கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தர பிரிவினரை நோக்கிய நகர்வு

# ஆசிரியர் செய்தி

“லீடர்” எனும் எமது சஞ்சிகையின் பதினெட்டாவது இதழூடாக உங்களை மீண்டும் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி. கடந்த சஞ்சிகையில் பலரும் பலவித கருத்துக்களையும், ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் தந்து எம்மை ஆதரித்திருந்தீர்கள். அனைத்து லீடர் ஆர்வலர்களுக்கும் எம் நன்றிகள்.

இந்த இதழில் க.பொ.த உயர்தர மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், மற்றும் வங்கி ஊழியர்கள் போன்றோரையும் கருத்திற்கொண்டு ஆக்கங்களை வெளியிடுகின்றோம். தொடர்ந்து உங்களின் ஆதரவு எமக்குக்கிட்டும் என்னும் உறுதியான நம்பிக்கையில் இவ் இதழை உங்களின் கரங்களில் தவழவிடுகின்றோம்.

**ஆசிரியர்**
**திரு. ரா. கிஷோகுமார்**
**விரிவுரையாளர் (தகுதிகாண்)**
**முகாமைத்துவ துறை**

*தங்களின் கருத்துக்கள் ஆலோசனைகள், விமர்சனங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:*

**ஆசிரியர்,**
**“லீடர்” சஞ்சிகை,**
முகாமைத்துவ துறை,
வர்த்தக முகாமைத்துவ பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்


**ஆசிரியர்**
**திரு. ரா. கிஷோகுமார்**
விரிவுரையாளர் (தகுதிகாண்)
முகாமைத்துவ துறை

**ஆலோசனைக் குழு**

**திருமதி. றோ. றாகல்**
சிரேஸ்ட விரிவுரையாளர்

**திரு. அ. அன்ரூ.**
சிரேஸ்ட விரிவுரையாளர்

**திரு. டீ. பிரபாகரன்.**
சிரேஸ்ட விரிவுரையாளர்

**திருமதி. பா. கென்னடி**
சிரேஸ்ட விரிவுரையாளர்

**கலாநிதி. அ. அருள்ராஜா**
சிரேஸ்ட விரிவுரையாளர்

**திருமதி. எல். டி. விக்ரர்**
சிரேஸ்ட விரிவுரையாளர்

**திருமதி. டி. தவக்குமார்**
சிரேஸ்ட விரிவுரையாளர்

**கணணி நெறியாளர்**

**எஸ். றாகல்**
உதவி விரிவுரையாளர்
முகாமைத்துவத் துறை

## உள்ளடக்கம்

1. பசுமைச் சந்தைப்படுத்தலும் பேண்தகு அபிவிருத்தியும்

ஷாமினி நியூட்டன்
உதவி விரிவுரையாளர்
கிழக்கு பல்கலைக்கழகம்

2. உலகமயமாக்கம்

சௌம்யா குழந்தைவடிவேல்
உதவி விரிவுரையாளர்
கிழக்கு பல்கலைக்கழகம்

3. முயற்சியாண்மையின் வகிபாகம்

செலோமியா றாகல்
உதவி விரிவுரையாளர்
கிழக்கு பல்கலைக்கழகம்

4. வறுமை

பைசல் அன்டனட் சாமிளா
உதவி விரிவுரையாளர்
கிழக்கு பல்கலைக்கழகம்

# பசுமைச் சந்தைப்படுத்தலும் பேண்தகு அபிவிருத்தியும்.

# Green Marketing and Sustainable Development

ஷாமினி நியூட்டன்
உதவி விரிவுரையாளர்
வர்த்தக முகாமைத்துவப் பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்.

சமீபகாலமாக ஊடகங்களினாலும், வர்த்தக நிறுவனங்கள், வாடிக்கையாளர், சமூகநலன் விரும்பிகளினாலும் அதிகப்படியான கவனத்தை ஈர்த்துள்ள எண்ணக்கரு பசுமைச் சந்தைப் படுத்தலாகும். இதற்கு பிரதான காரணம் நவீன சந்தைப்படுத்தல் பல சிக்கல் நிலைமைகளை உருவாக்கியுள்ளமை ஆகும். அவையாவன சந்தைச் செயற்பாடுகளின் வளர்ச்சியானது துரித பொருளாதார அவிபிருத்தி, மேம்படுத்தப்பட்ட தொழில் நுட்பத்துடனான பேரளவு உற்பத்தி, ஆடம்பர சொகுசுவாழ்க்கை (Luxurious life) முறைமை, வணிகங்களுக்கிடையேயான கடுமையான போட்டி, வாடிக்கையாளரைக் கவரும் நோக்குடன் ஆரோக்கியமற்ற சந்தை தந்திரோபாயம் (Unhealthy marketing tactics) மற்றும் உற்பத்திகளின் பிரயோகம், போலி விளம்பரப்படுத்தல்கள், வர்த்தக தாராளமயப்படுத்தல், உலகமயமாக்கல், பல்தேசியக் கம்பனிகளின் உருவாக்கம் போன்றன சந்தைப்படுத்தலினை மேலும் சிக்கலாக்கியதுடன் இவற்றின் எதிர்மறை விளைவாக இவை மக்கள் நலன் மற்றும் சூழல்பாதுகாப்பு சமநிலை என்பவற்றின் மீது பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக கைத்தொழில் பேட்டைகளின் உருவாக்கம் பல்வேறுபட்ட சூழல் மாசுபடுதலை உருவாக்கும் பிரதான காரணியாக உருவெடுத்துள்ளது. இவ்வாறு அதிகப்படியான சூழல் மாசடைதல் இயற்கையின் சமநிலையில் பாதிப்பினை ஏற்படுத்துவதால் எதிர்மறையாக இயற்கை உலகவெப்பமயமாதல், கடுமையான மழை, வறட்சி, நிலநடுக்கம் சுனாமி, சூறாவளி போன்ற அனர்த்தங்களாக உருவெடுத்துள்ளது. இவ்வாறான அனர்த்தங்களை இழிவுபடுத்தும் ஓர் சிறந்த கருவியினை உற்றுநோக்குமிடத்து பசுமைச் சந்தைப்படுத்தலின் பங்களிப்பு இன்றியமையாததாகும்.

பசுமைப்படுத்தல் என்பது பிரதானமாக பொருட்கள் மற்றும் சேவைகளை உற்பத்தி விற்பனை செய்யும் போது சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாத வண்ணம் சூழலினைக் கருத்திற் கொண்டு வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகும். பசுமைச் சந்தைப்படுத்தலானது பேண்தகு அபிவிருத்தி மற்றும் சமூகப்பொறுப்பில் அக்கறை செலுத்தும் பாரிய முன்னணி வர்த்தக நிறுவனங்களால் பெரும்பாலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் ஒரு பாகமாக வணிகங்கள் கவர்ச்சிகரமான பொருள் உற்பத்தி செய்வதோடு அவ்வுற்பத்தியோடு தொடர்புடைய பொதியிடல், போக்குவரத்து, சக்தி, நீர் விரயங்களை இழிவுபடுத்தலினை யுக்தியாகக் கொண்டு குறைந்த விலையில் பொருட்களை

விற்பனை செய்து வாடிக்கையாளர் விசுவாசத்தை (customer loyalty) மேலும் பலப்படுத்துகின்றது.

தகவல் தொழில்நுட்ப புரட்சியால் முன்னொரு போதும் இல்லாதவாறு வாடிக்கையாளர் சிறந்த நுகர்வுத்திறனைக் கொண்டுள்ளனர். எனவே வாடிக்கையாளர் பசுமைப் பொருள் நுகர்வில் அதிகளவு ஆர்வம் காட்டுகின்றனர். இதனை உறுதிசெய்யும் பொருட்டு பிரபல ஆராய்ச்சி நிறுவனமான Nielson company 2014ம் ஆண்டு 60 நாடுகளில் 30,000 ற்கு மேற்பட்ட நுகர்வோருக்கிடையில் பசுமை நுகர்வு தொடர்பாக ஆய்வினை மேற்கொண்டது. ஆய்வின் முடிவானது 55% நுகர்வோர் சமூகப் பொறுப்புணர்வுடனும் தமது ஆரோக்கியம் கருதியும் பசுமைப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக மேலதிகப் பணம் செலுத்தி வாங்கத் தயாராக உள்ளனர் என்பதனை வெளிக்காட்டியது. அத்துடன் வாடிக்கையாளர்கள் பசுமைச் சந்தைப்படுத்தலில் ஆர்வம் காட்டி வருகின்றமையின் விளைவுகளாவன :

- நுகர்வோர் கரிய வேளாண்மை அடிப்படையிலான சமையல் பொருட்கள், பழங்கள், காய்கறிகளை நுகர்வதில் ஆர்வம் காட்டிவருதல்.
- பிளாஸ்ரிக் மற்றும் பிளாஸ்ரிக் தயாரிப்புக்களிலான பொருட்கள் பயன்படுத்துதலை குறைத்தல் (உ.ம் பிளாஸ்ரிக் பொருட்களுக்குப் பதிலாக இலைகள், சனல் துணி பைகளைப் பயன்படுத்துதல்)
- பதப்படுத்தப்பட்ட பொருட்களுக்குப் (Processed product) பதிலாக மூலிகைப் பொருட்களின் அதிகரித்த நுகர்வு.
- இரசாயன உரங்கள் மற்றும் பூச்சி கொல்லிகளின் பயன்பாடுகளை இழிவு படுத்துவதோடு அதற்குப் பதிலாக உயிர் உரங்கள் (Bio fertilizers) பயன்பாட்டினை ஊக்குவித்தல்.
- நுகர்வோர் உட்பட தொழிற்துறை உற்பத்திகளின் கழிவுகளை மீள் சுழற்சி செய்ய உலகளாவிய ரீதியிலான முயற்சிகள்.
- நுகர்வோர் மூலிகை மருந்துகள் , இயற்கைச் சிகிச்சை முறை (Natural therapy) மற்றும் யோகா பயிற்சிகள் மீதான நாட்டம அதிகரித்தல்.

உலகளாவிய சுற்றுச்சூழல் ஏற்றத்தாழ்வு (Global ecological imbalance) உலக வெப்பமடைதல் என்பன சூழல் வல்லுனர்கள், விஞ்ஞானிகள், சமூக அமைப்புக்கள் கூட சுற்றுச்சூழல் சமநிலை சீர்குலைதலை தடுக்க உறுதியான முயற்சிகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்துள்ளது. இதன் விளைவாக உலகவங்கி , SAARC, UNO, WHO மற்றும் பல உலகளாவிய நிறுவனங்களும், அமைப்புக்களும் பசுமைச் சந்தைப்படுத்தலை ஊக்குவித்து அமுலாக்கம் செய்ய பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. வணிகங்கள் மற்றும் அமைப்புக்களது பசுமைச் சந்தைப்படுத்தல் நாட்டம் மீதான எடுத்துக்காட்டுக்களாவன பின்வருமாறு:

- காடுகள், தாவரங்கள், விலங்கினங்கள், ஆறுகள், ஏரிகள் கடல் மற்றும் கடல் வளங்களை பாதுகாப்பதற்கான கடுமையான ஏற்பாடுகள்.
- ஜுன் 5ம்திகதி உலக சுற்றுச்சூழல் தினமாக அறிவிப்பு.
- போலி மற்றும் கலப்படம் என்பவற்றை கட்டுப்படுத்த கடுமையான சட்டவிதிகள் அமுல்படுத்தல்.
- சூழல் மாசடைதலைக் கட்டுப்படுத்தல் மற்றும் சுற்றுச் சூழல் நட்பு உற்பத்திகளை (eco friendly product) ஊக்குவிக்ககும் நோக்குடன் உற்பத்தி பணி நிறுவனங்களை கண்காணிக்கும் வகையில் பல்தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களை நிறுவுதல்.
- மீளப்புதுப்பிக்கக் கூடிய வளங்களைக் கொண்டு உற்பத்தியில் ஈடுபடல் (உ.ம்: பிளாஸ்ரிக் தளபாட உற்பத்திக்குப் பதிலாக மூங்கில் தளபாடம்)
- உணவகங்கள் தமது உற்பத்திக்கான இறைச்சி, மரக்கறி, மீன் ஏனைய மூலப் பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது உள்ளூர் உற்பத்திகளை கொள்வனவு செய்வதனூடாக நுகர்வோர் கவனத்தையீர்பதோடு தனது சமூகத்திலேயே முதலீடு செய்யும் தன்மையினை பிரதிபலித்தல்.
- கரிம உணவு (organic food) உற்பத்தி சந்தைப்படுத்தல் விளம்பரத்தின் போது பூச்சி கொல்லிகள் இல்லாத, மரபணு மாற்றமடையாத (non genetically modified foods) உணவுகளை நுகர்வோர் விரும்பத்தக்க வகையில் உற்பத்தி செய்தல்.

**இலங்கையில் பசுமைச் சந்தைப்படுத்தல் நடைமுறைகள்:**

அண்மைக்கால சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) ஆய்வறிக்கையானது இலங்கையில் பசுமைப்படுத்தல் நடைமுறைகளை சிறப்பாக நடைமுறைப்படுத்தியுள்ள முதல் தர 07 நிறுவனங்களை கண்டறிந்துள்ளது. இவ்வாறாக ஊழியர் தொடர்பாகவும் சுற்றுச் சூழல் சமநிலைத்தன்மை தொடர்பாகவும் கூடியளவு அக்கறை செலுத்திய 07 நிறுவனங்களில் HNB, Seylan Bank, Heritance Kandalama மற்றும் Cinnamon lodge என்பனவும் உள்ளடங்கும்.

எனினும் அமெரிக்க வணிக, ஊடகவியலாளர்கள் மற்றும் பத்திரிகை ஆய்வு அறிக்கையினை மேற்கோள்காட்டி வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையின் படி இலங்கையானது 80% மான பிளாஸ்டிக் கழிவுகளை கடலினுள் செலுத்தும் முதல் 20 நாடுகளில் இடம் பிடித்துள்ளது.

ஆனாலும் பசுமைச் சந்தைப்படுத்தலை ஊக்குவிக்கும் பொருட்டு அபிவிருத்தியடைந்து வரும் நாடான இலங்கை பல முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றமை மறுக்கமுடியாத உண்மையாகும். இதன் ஒரு கட்டமாக 2017ம் ஆண்டு இலங்கை அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களால் 2007 ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு செயலற்றிருந்த 20 தடிமன் உள்ள (20 microns in thickness) பொலித்தீன் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற சட்டத்தை புதுப்பித்தமை.

சமீப காலங்களில் பசுமைச் சந்தைப்படுத்தல் ஓர் சுவாரஸ்யமான மற்றும் முகாமைத்துவ, கல்வி, நிர்வாகத் துறைகளில் பின்பற்றப்பட்டு வருகின்ற எண்ணக்கருவாகும். இதன் பிரதான காரணம் பசுமைப்படுத்தலில் அக்கறை செலுத்தத் தவறுமிடத்து அதன் விளைவுகள் அச்சுறுத்தலாக இருப்பதாகும். உதாரணமாக இன்று தொழிற் பேட்டைகளின் அபிவிருத்தி நோக்கம், சூழல் வளங்களை சுரண்டுவதால் சுற்றுச்சூழல் அதன் இயற்கை அம்சங்கள் பாதிப்படைவதோடு, அனைத்து உயிரினங்கள், விலங்கினம், மீனினம், மூலப் பொருட்கள் அருகிச்செல்லும் தன்மை காணப்படுகின்றது. எனவே நாம் உயிர்வாழும் உலகை எமதும், எமது எதிர்காலச் சந்ததியினரினதும் நலன்கருதி பசுமைச் சந்தைப்படுத்தல் எண்ணக்கருவில் அக்கறை செலுத்துதல் இன்றியமையாததாகும்.

# உலகமயமாக்கம்

# Globalization

சௌம்யா குழந்தைவடிவேல்
உதவி விரிவுரையாளர்
வர்த்தக முகாமைத்துவப் பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்.

கடந்த பல நூற்றாண்டுகளாக நாடுகளையும் நாட்டு மக்களையும் ஒன்றிணைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இந்த முயற்சிகள் பூமியில் வாழும் மனிதர்களின் அனைத்து அம்சங்களையும் இணைப்பதற்கான நடவடிக்கையாகும். அவையானவ சமூக, அரசியல், கலாசார மற்றும் பொருளாதார அம்சங்களாகும். ஆனால் தற்போதைய ஆண்டுகளில் உலக நாடுகள் முழுமையாக உலகமயமாக்கலிற்கு உட்படுத்தப்பட்டு வருகின்றதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. உலகமயமாக்கல் என்பது உலக நாடுகளையும் அவற்றின் மக்களையும் ஒருங்கிணைக்கும் ஒரு செயன்முறையாகும். உலகமானது அண்மைக்காலங்களில் ஒரு சிறிய இடமாக மாறிக்கொண்டிருக்கின்றது. இதன் கருத்து உலகமானது பருமனில் சுருங்குகின்றது என்பதல்ல மாறாக உலக மக்கள் பல்வேறு விடயங்கள் குறித்து ஒருவருக்கொருவர் நெருக்கமடைகின்றனர் என்பதாகும். எவ்வாறாயினும் நாம் உலகமயமாக்கலிற்கு ஏற்கனவே கணிசமானளவு ஆளாகி விட்டோம் என்ற வகையில் உலகமயமாக்கலினை எதிர்வு கொள்ளல் என்பது இங்கு தவிர்க்க முடியாததும் முக்கியமானதுமாகும்.

உலகமயமாக்கலானது பல்வேறு விடயங்ளை உள்ளடக்கி காணப்பட்ட போதிலும் உலக பொருளாதாரத்துடன் மட்டுமே மட்டுப்படுத்தி பார்க்கின்றோம். அதாவது திறந்த பொருளாதாரத்தின் மூலம் உலகம் முழுவதும் ஒரே சந்தையாக மாற்றப்பட்டு வருவது உற்று நோக்கப்படுகின்றது. மேலும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியினால் பூகோள கிராமம் என்ற எண்ணக்கருவானது உலகத்தினை ஒரு சந்தையாக மாற்றுவதற்கு வழிவகுக்கும். அத்துடன் நாடுகளின் பொருட்கள் சேவைகளின் உற்பத்தி செயன்முறையில் உள்ளடங்கியுள்ள ஊழியத்தின் வேலைவாய்ப்பு மீதும் ஏனைய உள்ளீடுகள் மீதும் தாக்கம் செலுத்துவதுடன் முதலீடு (பௌதீக மூலதனம் மற்றும் மனித மூலதனம்) தொழில்நுட்பம், வினைத்திறன், விளைதிறன், போட்டி தன்மை என்பவற்றின் மீதும் அது பாரியளவில் தாக்கம் செலுத்துகின்றது. இவற்றைவிட தேசிய பொருளாதாரத்தின் மீதான உலகமயமாக்கலின் தாக்கங்கள் சில கீழே வருமாறு:

**தொழில்நுட்ப புத்தாக்கம்:** புதிய தொழில்நுட்பங்கள் உலகமயமாக்கத்திற்கான ஒரு காரணியாக அமைந்துள்ள அதேவேளை உலகமயமாக்கமும் அது ஏற்படுத்தியுள்ள போட்டி நிலமைகளும் தொழில்நுட்பத்தில் மேலும் முன்னேற்றங்களைத் தூண்டுகின்றன.

**நேரடி வெளிநாட்டு முதலீடு:** இம்முதலீடானது மூலதன மாற்றல்கள், உலக வணிக நிறுவனங்களின் உருவாக்கம், கைத்தொழில் மீள்கட்டமைப்பு என்பவற்றில் முக்கிய

இடத்தினை வகிக்கின்றது. இவை அனைத்தும் தேசிய மட்டத்தில் தாக்கங்களைக் கொண்டிருக்கின்றன.

**சேவை துறை வளர்ச்சிகள்:** உலகமயமாக்கலானது நிதியியல், சட்டம், முகாமைத்துவம், தகவல் முதலிய சேவை துறைகளின் வர்த்தகத்தில் அதிகரித்த வளர்ச்சியை ஏற்படுத்தி வருகின்றது.

எவ்வாறாயினும் உலகமயமாக்கலை ஏற்படுத்தும் பல காரணிகள் உற்று நோக்கப்பட்டு வருகின்றது. அவற்றை ஆராய்வதன் மூலமே உலகமயமாக்கலின் சாதக பாதக நிலைமைகளை அறிந்து கொள்ளலாம். இதில் முக்கிய காரணியாக தொழில்நுட்ப முன்னேற்றம் கருதப்படுகின்றது. இது போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் துறைகளின் செலவுகளை குறிப்பிடத்தக்களவில் குறைத்துள்ளதுடன் தரவுகளைப் பேணுவதிலும் தகவல்களை சேமித்து வைப்பதிலும் காணப்பட்ட செலவுகளை மிக கடுமையாக குறைத்துள்ளது. அத்துடன் மற்றைய காரணியான வர்த்தக அல்லது பொருளாதார தாராளமயமாக்கல் என்பது வர்த்தகப் பாதுகாப்புகளை குறைவடைய செய்து ஒரு தாராள உலக வர்த்தக முறைமைக்கு வழிவகுத்துள்ளது. மேலும் தொழில்நுட்ப மாற்றத்தால் ஏற்படுத்தப்பட்ட அதிகரித்த தொடர்பாடல் வசதிகளால் நிறுவனங்களில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. அதாவது நிறுவனங்கள் அவற்றின் சந்தைகளையும் உற்பத்தி வசதிகளையும் தேசிய, பல்தேசிய மற்றும் உலகளாவிய எல்லைகளை நோக்கி விரிவுபடுத்துகின்றன. இத்தகைய நிறுவன மாற்றங்களும் இலாபம், உற்பத்திதிறன் என்பவற்றின் அதிகரிப்பிற்கு வழிவகுத்து உலகமயமாக்கலை நோக்கி நகரச் செய்கின்றது.

மேலும் இவ் உலகமயமாக்கலானது சாதக மற்றும் பாதக நிலைமைகளை தன்னகத்தே கொண்டுள்ளது. சாதக நிலைகளை உற்று நோக்குவோமாயின் அவை பின்வருமாறு அமையப்பெறும்.

1. வர்த்தகம் விரிவடைதல்:
   உலகமயமாக்கல் மூலம் வர்த்தகம் விரிவடைந்து அதன் மூலம் தனிநபர்களோ, நிறுவனங்களோ, ஏதேனும் அமைப்புக்களோ, நாடுகளோ, வர்த்தக கூட்டுத்தாபனங்களோ நன்மை பெறுகின்றன. இதன் மூலம் நுகர்வோர் உலகளாவிய சந்தையில் வெவ்வேறு நாடுகளில் இருந்து பெறப்பட்ட பல்வேறு வகையான பொருட்களை நுகரக் கூடியதாக உள்ளது.
2. போட்டித்தன்மை:
   உலகளாவிய ரீதியில் போட்டித்தன்மை அதிகரிப்பால் உற்பத்தியும் வினைத்திறனும் அதிகரிக்கப்பட்டு சந்தை விரிவடைந்து சிறப்புத் தேர்ச்சிக்கும் தொழில் பிரிப்புக்கும் வழிவகுக்கின்றன. அவை தேசிய ரீதியில் மட்டுமல்லாமல் உலகளாவிய ரீதியிலும் உற்பத்தியை அதிகரிக்கின்றது.
3. உற்பத்தித்திறனும் புதிய கண்டுபிடிப்புகளும்:
   உலகமயமாக்கல் மூலமாக உலகளாவிய ரீதியில் அதிகரித்த உற்பத்தித்திறன் மற்றும் போட்டி அழுத்தம் காரணமாக புத்தம் புதிய கண்டுபிடிப்புக்களும் வாய்ப்புக்களும் காணப்படுகின்றன.

4. அளவுத்திட்ட சிக்கனங்கள்:
   உலகமயமாக்கலினால் அளவுத்திட்ட சிக்கனங்கள் பரவலாக ஏற்படுத்தப்பட்டு விலைகளும் செலவுகளும் குறைவடையச் செய்து தொடர்ச்சியான பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கின்றன.

மேற்குறிப்பிடப்பட்டவாறு உலகமயமாக்கல் பல நன்மைகளைத் தந்தபோதும் பல உள்ளார்ந்த பிரச்சினைகளையும் கொண்டுள்ளது. அப்பிரச்சினைகள் பல்வேறு மட்டங்களில் அதன் விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றது. அவையாவன பின்வருமாறு:

1) **சுற்றுச்சூழலில் ஒருமைப்பாடு குறைதல்:**
   உலகமயமாக்கலினால் அபிவிருத்தியடைந்த நாடுகளில் உள்ள நிறுவனங்கள் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகிளின் திறனற்ற பலவீனமான விதிகளையும் வளங்களையும் பயன்படுத்தி கொள்வதனால் சுற்றுச்சூழலின் ஒருமைப்பாட்டில் பாதிப்பு ஏற்படுகின்றது.
2) **மலிவான ஊழியர் பயன்பாடு:**
   உலகமயமாக்கல் மூலம் மலிவான விலையில் ஊழியர்கள் அபிவிருத்தி அடைந்து வரும் நாட்டில் இருந்து அபிவிருத்தியடைந்த நாட்டிற்கு கொண்டுவரப்படுகின்றனர். இப்போக்கு தற்போது அதிகரித்த வண்ணம் உள்ளது. இது பொருளாதார ரீதியாக பாதிப்புக்களையும் ஏற்படுத்துகின்றது.
3) **வருமான சமமின்மை:**
   உலகமயமாக்கலின் நன்மைகளை சமமாக தனிநபர்கள், நிறுவனங்கள், நாடுகள் இடையே பகிர்வதில் பல்வேறு பிரச்சினைகள் உருவாகி வருகின்றது. இங்கு பெரும்பாலான நன்மைகள் அபிவிருத்தி அடைந்த செல்வந்த நாட்டிற்கும் அந் நாட்டைச் சேர்ந்த செல்வந்த தனிநபரிற்குமே சென்றடைகின்றது. இதன் மூலம் வருமான சமமின்மை அதிகரித்து வருவதுடன் தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் பல முரண்பாடுகளுக்கும் வழிவகுத்து வருகின்றது.
4) **உறுதியின்மை:**
   உலகளாவிய ரீதியில் நாடுகள் அனைத்தும் ஒன்றில் ஒன்று அதிகமாகத் தங்கிக் கொண்டிருப்பதினால் பிராந்திய ரீதியிலும் மற்றும் உலகளாவிய ரீதியிலும் உறுதியின்மை ஏற்படுகின்றது. இவ்வாறு குறித்த ஒரு நாட்டின் உள்நாட்டுப் பொருளாதாரத்தில் ஏற்படும் உறுதியின்மை அதாவது தளம்பல்கள் அல்லது நெருக்கடிகள் கூட உலகளாவிய ரீதியான தாக்கத்தை ஏற்படுத்தும்.
5) **ஏனைய பொருளாதாரம் சாராப்பிரச்சினைகள்:**
   உலகமயமாக்கம் பொருளாதாரப் பிரச்சினைகளை மட்டுமன்றி பொருளாதாரம் சாரா பிரச்சினைகளையும் ஏற்படுத்தக்கூடும். குறிப்பாக பாதுகாப்பு பிரச்சினையாகும். இது நாடுகளுக்கிடையே முரண்பாடுகளை தோற்றுவித்து உலகயுத்தத்திற்கும் வழிவகுக்கக் கூடும்.

மேலே அடையாளங் காணப்பட்ட உலகமயமாக்கலில் உருவாக்கப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வுகளும் சர்வதேச ரீதியில் கடைப்பிடிக்கப்படுகின்றது. அதாவது உலகமயமாக்கலினால்

அதிகளவில் நன்மையும் நாடுகளிடம் வரி அறவிட்டு உலகமயமாக்கத்தினால் பாதிக்கப்படும் நாடுகளுக்கு நிதிசார்ந்த மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்கலாம். மேலும் சர்வதேச ஒத்துழைப்பு, புதிய நிறுவனங்களின் உருவாக்கம் மற்றும் நடைமுறையில் இருக்கும் நிறுவனங்களின் விரிவாக்கம் ஆகியன உறுதியின்மைப் பிரச்சினைக்கு தீர்வாக அமையலாம். அத்துடன் முறைசார் மற்றும் முறைசாரா நிறுவனங்கள் ஊடாக உலகளாவிய ரீதியான ஒத்துழைப்பானது உலகமயமாக்கம் மூலம் ஏற்படும் பாதுகாப்பு, சூழல், சுகாதாரம் மற்றும் புவி வெப்படைதல் தொடர்பான பொருளாதாரமில்லாத பிரச்சினைகளை கூட வெற்றிகரமாக கையாள முடியும். எனினும் உலகமயமாக்கத்தினால் ஏற்படும் சவால்களுக்கு முகம் கொடுப்பதற்கு புதிய வகையான உலகளாவிய ஒத்துழைப்புக்களையும் புதிய நிறுவனங்களையும் உருவாக்குவது கூட ஒரு மிகப்பெரிய சவாலாகும்.

ஆகவே உலகமயமாக்கலானது பொருளாதாரம், அரசியல், பாதுகாப்பு, சூழல், சுகாதாரம், சமூகம், கலாசாரம் என்பவற்றின் பிணைப்புக்களாக உலக மக்களை நெருக்கமாக்குவதுடன் அவர்கள் ஒருவரில் ஒருவர் தங்கி வாழும் நிலையையும் அதிகரிக்கச் செய்வதுடன் புதிய உலக முறைமையின் ஒரு சக்தி வாய்ந்த நடைமுறைசார் பண்புக்கூறாகும்.

# முயற்சியாண்மையின் பங்கு
# Roles of entrepreneurship

செலோமியா நாகல்
உதவி விரிவுரையாளர்
வர்த்தக முகாமைத்துவப் பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்.

பொருளாதார வளர்ச்சி மற்றும் நாட்டின் வாழ்க்கைத் தரத்தில் தாக்கம் செலுத்தும் அளவிற்கு இன்றைய சமுதாயத்தில் முயற்சியாண்மை முக்கிய பங்கு வகிக்கின்றது. ஒருவர் தனது சொந்தத் தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கோடு முயற்றியாண்மை ஒன்றில் ஈடுபடும் போதும் அது ஒருவர் வாழும் சமூகம் பகுதி மற்றும் நாட்டிற்கு மிகப் பெரிய பங்காற்றுவதாக காணப்படுகின்றது.

ஒருவர் முயற்சியாண்மை நடவடிக்கையை முன்னெடுக்கும் போது தன்னிடமுள்ள வளங்கள், முதலீடுகளை அதில் முதலீடு செய்கின்றார். அத்தோடு அவர் பொதுமக்கள் முதலீட்டாளர்களிடம் இருந்து மேலதிகமாக தேவைப்படுகின்ற முதலீடுகள் கடன்வசதிகளைப் பெற்றுக் கொண்டு பயன்படுத்துகின்றார். இதனால் இந்த முயற்சியாளர் வெற்றிகரமாக தனது முயற்சியாண்மையை முன்னெடுக்கும் போது மறைமுகமாக இத்தரப்பினரும் தங்களது வருமானங்களை அதிகரித்துக் கொள்கின்றனர். இது அவர்களின் வாழ்க்கைத் தரத்தையும் அத்தோடு பொருளாதார அபிவிருத்தியின் நோக்கங்களையும் கூட அடைய வழிகோலுகின்றது.

ஒரு முயற்சியாளர் வேலைதேடும் சமூகத்தின் நடுவே உள்ள ஒரு வேலை வழங்குனர் ஆவார். வேலை தேடிக்கொண்டிருப்பவர் ஒரு முயற்சியாளராக மாறும் போது பொருளாதாரத்தில் வேலை தேடுவோரின் எண்ணிக்கை குறைவடைவதோடு பலருக்கான வேலைவாய்ப்பு உருவெடுக்கக் கூடிய சூழ்நிலை உருவாகின்றது. இது பொருளாதார அபிவிருத்தியல் பிரதானமான நோக்காகிய வேலைப்பற்றாக்குறை பிரச்சினையை நிவர்த்தி செய்ய உதவுகின்றது. இதனாலேயே நாடுகளும் அரசாங்கங்களும் முயற்சியாளரை ஊக்குவிக்க பலவேறு வகைகளில் ஊக்குவிப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்துகின்றன.

இவ்வாறான முயற்றியாண்மைச் செயற்பாடுகள் பின்தங்கிய நிலையில் உள்ள பிரதேசங்களில் ஆரம்பிக்கப்படும் போது இதன் விளைவாக தங்களது பிரதேச அபிவிருத்தியும் அடையப்படக் கூடியவொன்றாகவுள்ளது. ( அத்தோடு இவ்வாறான முயற்சியின் ஆரம்பங்கள் மேலும் பல முயற்சியாண்மைகளின் உருவாக்கத்திற்கு வழிகோலுகின்றது) ஒரு முயற்சியாண்மையின் வளர்ச்சியானது அப்பிரதேசத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேலும் அதிகரிக்கக் கூடியதாக அமைவதோடு மின்சாரம், நீர்வசதி, பாடசாலை, வைத்தியசாலை போன்ற பொது மற்றும் தனியார் சேவைகளை பெற்றுக் கொள்ளக்கூடிய முன்னேற்றமடைந்த பிரதேசமாக மாறும். அத்தோடு இவை நேரடி மற்றும் மறைமுகமான வேலை வாய்ப்புக்களை உருவாக்குகின்றது. இவை நாட்டின் பொருளாதாரத்தின் வெளியீடுகளில் சேர்க்கப்படக்கூடியனவாகும். அரசாங்கம்

இவ்வாறான அபிவிருத்திகயை சிறுகடன் மற்றும் பல விதமான ஊக்குவிப்பு திட்டங்கள் மூலம் அதிகரிக்கின்றது.

ஒருவர் முயற்சியாளராக இனங்காணப்படுவதற்கு புத்தாக்கம் ஒரு முக்கிய காரணியாக அமைகின்றது. ஒரு வெற்றிகரமான முயற்சியாண்மையின் காரணியாக அந்த முயற்சியாண்மையில் ஈடுபடுத்தபட்டிருக்கும் புத்தாக்கம் காணப்படுகின்றது. இப் புத்தாக்க முயற்சி அவர்களது உற்பத்திகளில் அல்லது அவர்களது சேவை வழங்கலில அல்லது அதை எவ்வாறு வழங்குகின்றார்கள் என்பதில் தாக்கம் செலுத்துகின்றது. அத்தோடு இப் புத்தாக்க முயற்சியால் ஒப்பீட்டுத் நன்மைகளை ஈட்டிக்கொள்வது இவ் முயற்சியாண்மைகளுக்கு மேலுமான ஒரு பலமாக அமைகின்றது புத்தாக்கத்துடனான முயற்சியாண்மை போட்டியாளர்களிடையே மேலோங்கி காணப்படுவதோடு இவ்வாறான முயற்சியாண்மை முன்னுரிமையான ஒரு வணிகமாக காணப்படுகின்றது.

இன்றை சூழ்நிலைகளில் ஒவ்வொரு தொழில்துறைகளிலும் குறிப்பிடத்தக்களவு போட்டி காணப்படுகின்றது. நுகர்வோரின் சார்பில் இவ்வாறான போட்டி வணிகங்கள் சந்தையில் காணப்படுவது வரவேற்கத்தக்க ஒரு விடயமாக காணப்படுகின்றது. ஏனெனில் அதிகரித்த போட்டியானது சந்தைக்கு உயர்ந்த தரமான பொருட்களைத் தருகின்றது. ஒரு நிறுவனம் சந்தையில் நிலைத்து நிற்கும் நோக்கிற்காக தரமான பொருட்களை சந்தை மற்றும் நுகர்வோருக்கு வழங்குகின்றனர். இது விலை யுத்தங்களையும் தோற்றுவிப்பதோடு எந்த முயற்சியாண்மை பலமாக உள்ளதோ அதுவே சந்தையில் எஞ்சுவதாக உள்ளது. எவ்வாறாயினும் இவ்வாறான முயற்சியாளரின் உள்நுழைகை வாடிக்கையாளருக்கு நன்மையாகவே அமைகின்றது.

இவ்வாறு பலவிதமான நன்மைகளை தம்மகததே கொண்டிருந்த போதும் அங்கேயும் தீமைகளும் எதிர்விளைவுகளும் இல்லாமல் இல்லை. இன்றை சூழ்நிலையில் அனைத்து வணிகங்களும் எதோ ஒரு வகையில் இயற்கை வளங்களைப் பயன்படுத்துகின்றன. சில வணிகங்கள் அவற்றைத் திறமையாக பயன்படுத்தி வருமானமீட்டுகின்ற போதும் அனைத்து வணிகங்களும் அவ்வாறு வெற்றிகரமாக நிலைத்து நிற்பதில்லை. அதே போன்று அரசாங்கம் முயற்சியாண்மைக்கு வழங்கிய சலுகைகள் வணிகங்களுக்கு கிடைப்பதில்லை. அல்லது சரியாகப் பயன்படுத்துவதில்லை என்றே கூறப்படலாம். அனைதது அரசின் சட்டங்களுக்கும் கட்டுப்பட்டே இம் முயற்சியாண்மைகள் நிலைத்து நிற்க வேண்டியுள்ளது.

புதிய முயற்சியாண்மைகள் புதிய தொழில் முயற்சிகளை தோற்றுவிக்கின்றமை உண்மையாக இருக்கின்ற போதும் இப் புத்தாக்கங்களுக்கும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் ஈடுகொடுக்க முடியாத பழைய வணிகங்கள் மூடப்பட வேண்டிய நிலைக்கு உள்ளாகலாம். இது ஏற்கனவே வேலையிலிருந்த ஊழியர்கள் மீண்டும் வேலையற்ற சமூகத்துடன் இணைய வேண்டிய நிலையும் தோன்றலாம்.

ஒரு முயற்சியாளரின் வெற்றியைத் தொடர்ந்து புதிதாக எடுக்கப்படும் முயற்சியாண்மைகள் அனைத்தும் நிலைத்து நிற்கும் எனக் கூறமுடியாது. ஒரு முயற்சியாளரின் வணிக

நோக்கங்கள் பலவித முன்னேற்றங்களை தரும போதும் கூட சில தனிப்பட்ட பழக்கங்கள் மற்றும் செயற்பாடுகள் கூட நிறுவனத்தின் வீழ்ச்சிக்கு காரணமாகலாம்.

எவ்வாறான ஒன்றை நாம் எடுத்து நோக்கும் போதும் அதில் வரையறைகள் காணப்படும். ஆயினும் அதன் நன்மைகளின் அளவு வரையறைகளை விஞ்சும் அளவிற்கு காணப்படும் போது அது சமூகத்திற்கம் நன்மை பயக்கக்கூடியதாக அமையும் முயற்சியாண்மையும் அவ்வாறான ஒன்றாகவே காணப்படுகின்றது.

பலவித தீமைகளிலும் பார்க்க இம்முயற்சியாண்மை சமூகத்தினரின் வாழ்க்கையை முன்னேற்றுகின்றது மற்றும வேலை வாய்ப்புக்ளை வழங்குகின்றது என்பது மறுக்கப்பட முடியாத ஒன்று. வெற்றிகரமான முயற்சியாண்மையின் விரிவாக்கத்தால் மேலும் பல நன்மைகளை சமூகம் அடைகின்றது. ஆரம்பத்தில் வழக்கமாக முயற்சியாண்மைகள் சிறியளவிலேயே ஆரம்பிக்கப்படுகின்றன. இது விரிவாக்கப்படும் போது வேலை வாய்ப்புக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

மக்களின் வாழ்க்கைத் தரத்தில் ஏற்படும் அதிகரப்பானது மக்களை அத்தியவசியத் தேவைகளைத் தாண்டி சிந்திக்கத்தூண்டும். இது மக்களின் தேவைகளைக் கூட்டும். இதனால் இன்னும் பலவிதமான சந்தைகளுக்கான கேள்விகள் உருவாகும். மற்றும் உயர்வடையும் அத்தோடு ஏற்கனவே உள்ள வணிகங்களின் வருமான மட்டமும் இதனால் அதிகரிக்காலம்.

அத்தோடு முயற்சியாளர்கள் தமது பிரதேசத்திலுள்ள சமூகநல அமைப்புக்களுக்கு நன்கொடைகளை வழங்கி முன்னேற்ற உதவும் சில சந்தர்ப்பங்களில் முயற்சியாண்மைகள் சமூகநல நோக்கத்தோடு செயற்பட முனையும் சந்தர்ப்பங்களில் மேலும் பல நன்மைகளை சமூகம் அடைந்து கொள்ளும். பெண்களுக்கான வேலைவாய்ப்புகள், கடன்வசதிகளை வழங்கி சமூகத்தை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபடலாம்.

முயற்சியாளர்கள் வழங்களில் இருந்து உச்சப்பயன்பாட்டைப் பெற்றுக் கொள்வதில் முதன்மையானவர்கள். அவர்கள் வினைத்திறனாக பயன்படுத்தும் போது வளங்கள் வீணாக்கப்படுவது குறைவடைகின்றது. கூட்டுறவு சட்டதிட்டங்களில் இருந்து தவிர்த்து முயற்சியாளர்கள் புதிய பொருட்கள், சமூகத்திற்கு நன்மை தரக்கூடியவற்றை உற்பத்தி செய்ய வாய்ப்புள்ளது. அத்தோடு முயற்சியாளர்கள் புதிய விற்பனை மற்றும் வணிக புத்தாக்கங்கள் புதிய கண்டுபிடிப்புக்களையும் தொழில் நுட்பங்களையும் உட்புகுத்தக் கூடிய சந்தர்ப்பங்கள் அதிகரிப்படுவதோடு இவை போட்டியாளரிடமிருந்து தங்களை தக்கவைத்துக் கொள்ளக் கூடிய உத்திகளாவும் பிரச்சினைகளுக்கான நவீன தீர்மானங்களைக் காணவும் உதவுகின்றன.

# வறுமை
# Poverty

பைசல் அன்டனட் சாமிளா

உதவி வரிவுரையாளர்

வர்த்தக முகாமைத்துவப் பீடம்

கிழக்குப் பல்கலைக்கழகம்.

வறுமையை வரையறை செய்வதில் உலகளாவிய ரீதியில் பல கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்ற போதிலும் வறுமையினை சிலர் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை என வரைவிலக்கணப்படுத்துகின்றனர். மேலும ஐக்கியநாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமானது வறுமைக்கான ஒரு சிறந்த வரைவிலக்கணத்தை வழங்குகின்றது. அதன்படி ஒரு மனிதன் உயிர்வாழ்வதற்குத் தேவையான குறைந்த பட்சத்தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவிற்குக் கூட வருமானத்தினைக் கொண்டிராத நிலைமையே வறுமையாகும். வறுமையானது ஒரு மனிதனை நீண்ட ஆயுள், ஆரோக்கியமான வாழ்க்கை, கௌரவமான வாழ்க்கைத் தரத்தினைப் பேணுதல், சுதந்திரம், சுயகௌரவம் மற்றும் ஏனையர்களால் மதிக்கப்படும் தன்மை என்பவற்றில் இருந்து தடுக்கின்றனது (UNDP 1997).

உறுதியான பொருளாதார வளர்ச்சியும் சமூக அபிவிருத்தியும் வறுமையைக் குறைப்பதற்கு தேவையான இரு பிரதான அடிப்படை அம்சங்களாகும். இவற்றினை வெற்றிகரமாக அடைந்து கொள்வதற்கு சிறப்பான பேரினப் பொருளாதார முகாமைத்துவமும் நல்லாட்சிச் செயன்முறையும் அத்தியவசியமாகும்.

இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்தே பல சமூக நலத்திட்டங்களை அமுல்படுத்தியதனால் உரிய சமூக அபிவிருத்தியை அடைந்த போதும், உறுதியான பொருளாதார வளர்ச்சியை அடைந்து கொள்ள முடியவில்லை. பொருளாதார வளர்ச்சி மந்தமாக காணப்பட்டமையினால் உற்பத்தி பெருக்கமோ வேலைவாய்ப்பு உருவாக்கமோ பாரியளவில் ஏற்படவில்லை.

ஏனெனில் மானியங்களை வழங்குவதை விட உற்பத்தியையும் வேலை வாய்ப்புக்களையும் அதிகரிக்கும் போது அவை வறுமைக் குறைப்பில் கூடுதலான தாக்கத்தினைச் செலுத்த முடியும். ஆனால் இந்நிலை இலங்கையில் பெருமளவில் காணப்படாமையினாலேயே இன்று வரை இலங்கை வறுமையை ஒழிக்கமுடியாமல் திண்டாடுகின்றது.

ஏனைய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் அனுபவத்தினைப் போன்று இலங்கையிலும் நிலமற்ற விவாசாயக் கூலித்தொழிலாளர்கள் குடும்ப உழைப்பினைப் பயன்படுத்தி உணவுப் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் சிறுநில விவசாயிகள், மீன்பிடித் தொழிலாளர்கள், குடிசைக் கைத்தொழில்களில் ஈடுபடுவோர், சிறு வியாபாரிகள், சுயதொழில் ஈடுபடுவோர், தச்சு மற்றும் மேசன் தொழில் செய்வோர் போன்ற வகுப்பினரிடையே வறுமையானது கூடுதலாக

காணப்படுகின்றது. யுத்த சூழ்நிலைகளின் காரணமாகவும் வறுமையானது மக்களிடையே அதிகமாகக் காணப்படுகின்றது.

**இலங்கையில் வறுமைக்கான காரணங்கள்:**

1. **வேலையின்மை:**

   குடும்பத்தலைவர் அல்லது உழைக்கக்கூடியவர்கள் வேலையின்றி வீட்டில் இருக்கும் போது போதியவருமானமின்றி குடும்பமானது வறுமையில் வாடுவது இயல்பாகும்.

2. **உட்கட்டுமான வசதிகள் போதாமை:**

   இலங்கையில் பெரும்பாலான பகுதிகளில் உட்கட்டுமான வசதிகள் (வீதிகள், நீர் விநியோகம், மின்சார விநியோகம்) போதாமல் காணப்படுவதினால் மக்கள் பெரும் சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளதுடன் வறுமையைக் குறைக்க முடியாமல் உள்ளது.

3. **அடிக்கடி மாறும் அரசாங்கக் கொள்கை:**

   இலங்கையில் வறுமையொழிப்புத் தொடர்பாக பதவிக்கு வரும் அரசாங்கங்களின் கொள்கையானது அடிக்கடி மாறுபடுவதாகக் சுட்டிக்காட்டப் படுகின்றது. ஒரு கொள்கை நடைமுறையில் இருக்கும் போது அவற்றின் இலக்குக்கள் அடையப்படாமல் மீண்டும் புதிய அரசாங்கம் நடைமுறைக்கு வந்ததும் வறுமை ஒழிப்பு கொள்கையும் மாற்றம் அடைகின்றது.

4. **குறைந்தளவு உள்நாட்டுச் சேமிப்பு.**

   உள்நாட்டுச் செலவு அதிகமாகவும் சேமிப்புக் குறைவாகவும் காணப்படுவதினால் முதலீட்டுக்கான போதிய நிதி உள்நாட்டில் கிடைக்காவிட்டால் விரைவான வளர்ச்சியை அடையமுடியாது. இதனால் வறுமை ஒழிப்பிலும் எதிர்மறையான விளைவுகள் ஏற்படக்கூடும்.

5. **வினைத்திறனான திட்டங்கள் காணப்படாமை.**

   வளங்கிடைப்பனவிற்கேற்ப திட்டங்கள் செயற்படுத்தப்படாமை பொருளாதாரத்தில் பாரிய பிரச்சினையாகக் கருதப்படுகின்றது. இதனால் வளம் விரயமாக்கப்படுவதுடன் அதனால் கிடைக்கப்படும் பயனும் இல்லாமல் போகின்றது.

6. **சமூகரீதியாக புறந்தள்ளப்படுதல் / ஓரங்கட்டப்படுதல்.**

   இனம், மதம், மொழி, மற்றும் சாதி அடிப்படையில் நபர்கள் உயர் வருமானம் தரும் தொழில் வாய்பிற்களில் இருந்து தடுக்கப்படும் போது அதுவும் வறுமைக்கு ஒரு பிரதான காரணியாக அமைந்து விடுகின்றது.

7. **தங்கியிருக்கும் இணங்குறி**

   அரசாங்கம் அல்லது இலாப நோக்கமற்ற பல தொண்டர் நிறுவனங்கள் தக்குத் தொடர்ந்தும் இலவசமாக அல்லது மானியமாக உணவுப் பொருட்களையும் சேவைகளையும் தரவேண்டும் என மக்கள் நினைப்பது அவர்களை ஆற்றலுடன் உழைப்பதில் இருந்து தடுக்கின்றது.

**இலங்கையில் வறுமையைக் குறைப்பதற்கான சில சாத்தியமான தீர்வுகள்.**

மக்களிடையே பல விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை வழங்கி வறுமையைக் குறைக்க அரசாங்கம் நடவடிக்கையெடுக்க வேண்டும். அந்த வகையில் நாட்டு மக்கள் அனைவரும் இயன்றளவு தமது வீட்டுத் தோட்டங்களில் மரக்கறிகளையும், பழ மரங்களையும் பயிரிடுவதற்கு ஊக்கமளிப்பதுடன் பல சுயதொழில் கைத்தொழிலாளர்களை ஊக்கப்படுத்தும் நோக்குடன் பல கடன் மற்றும் மானிய வசதிகளை வழங்க வேண்டும். மேலும் விவசாயத் தேவைகளுக்கு தேவையான நிலங்களின் கிடைப்பனவு அதிகரிக்க முடியாது என்பதனால் உற்பத்தித்திறன் மூலம் உற்பத்தியினை அதிகரிக்கக்கூடிய உபாயங்கள் வகுக்கப்பட வேண்டும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் பல உள்நாட்டு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மேல் மாகாணத்தை நோக்கி தமது முதலீடுகளை மேற்கொள்கின்றார்கள். ஆகவே கிராமப்புறங்களை நோக்கிய உட்கட்டுமான வசதிகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் பல முதலீட்டாளர்களை இலகுவாக கிராமப்புறங்களை நோக்கி கவரலாம். இதன் மூலம் பல புதிய வேலைவாய்ப்புக்களை உருவாக்கப்படும். வளங்கள் வினைத்திறனுடன் பயன்படுத்தப்படும். மக்களின் வறுமை நிலை குறைக்கப்படும்.

வறுமை உயர்வாகக் காணப்படும் உலர் வலங்களில் நீர்ப்பாசனத்திற்கும் குடிப்பதற்கும் நீர் இல்லாது மக்கள் கஸ்டப்படுவது பிரதான பிரச்சினையாகும். கடலில் வீணேகலக்கும் நீரை திசை திருப்புவதன் மூலம் மழைநீரை சேமிப்பதற்கும் உரிய திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும்.

பொதுவாக இலங்கையில் அதிகூடிய மாகாணங்களில் விவசாயத்துறையே மக்களின் வாழ்வாதாரத் துறையாக காணப்படுகின்றது. விவசாயத்தில் மட்டும் தங்கியிருப்பவர்கள் வெள்ளம் மற்றும் வரட்சிக் காலங்களில் கடுமையாக வறுமைக்கு உட்படுகின்றனர். ஆகவே குடும்பத்தில் ஒருவராவது விவசாயத்துறை தவிர்ந்த ஏனைய துறையில் நிலையான வருமானத்தைப் பெறக்கூடிய வகையில் ஒரு தொழிலில் ஈடுபடவேண்டும்.

வறுமையொழிப்புத் திட்டத்தை அமுல்படுத்தும் போது அரசியல் மயமாக்கம் தவிர்க்கப்பட வேண்டும். இதன் மூலம் உண்மையான குறிக்கோளை அடையலாம்.

வறுமையொழிப்பதில் அனைத்து திட்டங்களை விடவும் வேலை வாய்பினைப் பெற்றுக் கொடுக்கும் செயன்முறையானது சிறப்பாக பங்காற்ற முடியும். ஆகவே பாரிய வேலை வாய்ப்புக்களை உருவாக்கும் வகையில் அரசானது பல வேலைவாய்ப்புத் திட்டங்களை உருவாக்க வேண்டும்.

மேலும் மக்களிடையே கல்வியறிவு வீதத்தினை அதிகரிக்க வேண்டும். அதிலும் குறிப்பாக தொழில்சார் கல்வி அறிவு விதத்தினை அதிகரிக்க வேண்டும். இதன் மூலம் வேலையில்லாப் பட்டதாரிகளின் அளவு குறைக்கப்படுவதுடன் அவர்கள் தொழில் சந்தைக்கு ஏற்ற வகையில் தம்மை தயாரித்துக் கொள்வார்கள். ஆகவே வறுமையற்ற ஒரு இலங்கைத் தாய்நாட்டை உருவாக்க நாம் அனைவரும் ஒரே குடும்பமாக செயற்பட வேண்டும்.